**தலைப்பு 104 - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 104 - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 15,382.31 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 12,826.10 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2,556.21 மில்லியன் அதாவது 16.62 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,120.69 | 1,925.38 | 195.31 | 9.21 |
| மூலதனம் | 13,261.62 | 10,900.72 | 2,360.90 | 17.80 |
| மொத்தம் | 15,382.31 | 12,826.10 | 2,556.21 | **16.62** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

அமைச்சிற்குரிய 10401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 190.00 | 184.02 | 105.60 | 195.26 | 400.00 | 170.79 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பொது வைப்புக் கணக்கு

2015 யூலை 17 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/92 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அமைச்சிற்கு வழங்கப்பட்ட வாகனங்களுக்காக 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி மாதாந்த கட்டணமாக பெறப்பட்டிருந்த ரூபா 600,000 தொகை அமைச்சினால் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

10401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,774,633 ஆக இருந்ததுடன் அந்த மீதிகள் 01 வருடம் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 948.7 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2006 மார்ச் 28 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவைகளுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 104 | 729,610 | மோட்டார் வாகன விபத்துத் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கைகள் | | |
| | (i) 2015 யூலை 20 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | எவ்வித கொடுப்பனவோ அல்லது அங்கீகாரமோ இன்றி அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு மோட்டார் வாகனங்கள் பாராளுமன்ற பொதுத் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன. |
| | (ii) 2015 யூன் 29 ஆந் திகதிய SB/02/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | | ரூபா 41 மில்லியன் கிரயமான இன்னும் கையளிக்கப்படாத 03 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள்

இரண்டாம் பிரஜைகள் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்திச் செயற்திட்டத்திற்குரியதாக (கெமிதிரிய செயற்திட்டம்) உலக வங்கியினால் வழங்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 75 மில்லியனை உள்ளடக்கியதாக ஐக்கிய அமெரிக்க டொலர் 105 மில்லியன் முழுமையாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2009 ஒக்தோபர் 22 ஆந் திகதி முதல் 2014 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் செலவிடப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 170,213.76 தொகை (ரூபா 22,459,700) செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினம் உலக வங்கியினால் தகைமையற்ற செலவினமாக 2015 ஆம் ஆண்டின் போது உலக வங்கியின் நம்பிக்கைப் பொறுப்பு அவதானிப்பு அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த மொத்தச் செலவினத்தையும் மீண்டும் உலக வங்கிக்குச் செலுத்துவதற்கும், அந்த தகைமையைப் பெறாத செலவினங்கள் தொடர்பாக உள்ளகப் பரிசோதனையொன்றை நடாத்துவதற்கும் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அந்தத் தகைமைகளைப் பெற்றிராத கொடுப்பனவுகள் 2016 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாட்டைப் பெற்று செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக உள்ளகப் பரிசோதனையொன்று நடாத்தப்படவில்லை.

**3.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 72 | 62 | 13 | 3 |
| (ii) | மூன்றாம் நிலை | 154 | 97 | 57 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 209 | 222 | 5 | 18 |
| (iv) | ஆரம்ப நிலை | 105 | 63 | 42 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 01 | 03 | - |
| | மொத்தம் | 544 | 445 | 120 | 21 |

சிரேஷ்ட நிலையில் 03 பதவிகளையும், இரண்டாம் நிலையில் 18 பதவிகளையும் உள்ளடக்கிய 21 பேரில் மிகையான ஊழியர் எண்ணிக்கை அவதானிக்கப்பட்டது. ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த மிகையான ஊழியர்களின் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.